செ.வெ.எண்:44/மே நாள்:25.05.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## 2016-2017 கல்வியாண்டு தொடங்குவதை முன்னிட்டு மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிகளின் வாகனங்கள் ஆய்வு

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் இன்று (25.05.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், 2016-2017 கல்வியாண்டு தொடங்குவதை முன்னிட்டு மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிகளின் வாகனங்களை மேலாய்வு செய்தார்.

ஆய்வின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் 2016-2017 கல்வியாண்டு தொடங்குவதை முன்னிட்டு, பள்ளி செல்லும் மாணவ, மாணவியர்கள் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில் தமிழ்நாடு பள்ளி வாகனங்களின் சிறப்பு விதி 2012-ன் படி, வருவாய்த்துறை, போக்குவரத்து துறை,காவல்துறை மற்றும் கல்வித்துறை ஒருங்கிணைந்து மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளி வாகனங்களின் நிலை மற்றும் தரம் குறித்து ஆய்வு செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளின் வாகனங்கள் இன்று (25.05.2016) முதல் 27.05.2016 ஆகிய 3 நாட்கள் வரை ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இதில் மாவட்டத்தைச் சார்ந்த 632 வாகனங்கள் கூட்டாய்வு செய்யப்படவுள்ளது.

இந்த ஆய்வில் வாகனங்களின் பிரேக் திறன்,டயர்கள் நிலை, அவசர கதவு பொருத்தப்பட்டு சரியான முறையில் இயங்குகிறதா, வாகனத்தின் கதவுகள் இயக்க நிலை, வாகனத்தின் படிநிலை, வாகனத்தின் படிக்கட்டுகள், டிரைவர் கேபின் இருக்கைகள், இருக்கையின் கீழ்புறம் பள்ளி குழந்தைகளின் பைகளை வைப்பதற்கான ரேக்குகள், வாகனத்தின் உட்புறம், தரைப்பலகை நல்ல நிலையில் உள்ளதா, ஜன்னல்கள், ஜன்னல்களுடைய கிரில்கள், சிவப்பு மற்றும் வெள்ளை பிரதிபலிப்பான், நாடாக்கள், முதலுதவிப் பெட்டி மற்றும் மருந்துகள், தீயணைக்கும் கருவி மற்றும் வேகக்கட்டுப்பாட்டு கருவி ஆகியவை சரியாக உள்ளனவா என சோதனை செய்யப்படுகிறது.

இதில் குறைபாடு கண்டறியப்படும் வாகனங்களில் காணப்படும் குறைகளை நிவர்த்தி செய்து பள்ளி திறப்பதற்கு முன் மீண்டும் ஆய்விற்கு சமர்ப்பித்து சான்று பெற்ற பின்பு தான் பள்ளி குழந்தைகளை ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்படுவர் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன், இ.கா.ப., வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.ஜே.சேக்முகமது உள்பட அரசு அலுவலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**